விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆடி - 25 செவ்வாய் 10.08.2021 மலர் - 2, இதழ் - 126


விஜயபாரதம்


# உயர்கிறதா வரிகள் ?

நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் நிதிநிலை வெள்ளை அறிக்கையை நேற்று வெளியிட்டார். அதில், தமிழக அரசின் நிதிநிலை மோசமாக இருப்பதாக கூறப்பட்டுள்ளது. மேலும், 2014க்கு பிறகு மின்சார கட்டணம் உயர்த்தப்படவில்லை, பல ஆண்டுகளாக சொத்து வரியை உயர்த்தவில்லை. வரி அல்லாத வருமானம் 1 சதவீதத்தில் இருந்து 0.7 சதவீதமாகக் குறைந்துள்ளது. மாநில வரி வருவாய் வளர்ச்சி 4.4 சதவீதமாக சரிந்துள்ளது. 1 கி.மீ. தூரம் பொது போக்குவரத்து இயங்கினால் ரூ. 59.15 இழப்பு ஏற்படுகிறது என தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்பு ஆட்சி செய்த அ.தி.மு.க, சில வரிகளை உயர்த்தியபோது மக்களை கொள்ளை அடிக்கின்றனர் என கூச்சலிட்டு தடுக்க முயன்ற தி.மு.க, தாங்கள் ஆட்சிக்கு வந்தபிறகு, முந்தைய அரசு வரிகளை உயர்த்தவில்லை என குற்றம் சாட்டுவது வேடிக்கை. மேலும், 'தி.மு.க தலைமையிலான அரசு ஆகஸ்ட் 13ல் சமர்ப்பிக்க உள்ள பட்ஜெட்டில் மின்சாரக் கட்டணம், சொத்து வரி, பேருந்து டிக்கெட் உள்ளிட்டவற்றை பலமடங்கு உயர்த்த திட்டமிட்டுள்ளதையே இது காட்டுகிறது. வெள்ளை அறிக்கையை தி.மு.க முறைப்படி சட்டமன்றத்தில் வெளியிட்டு அதன் மீது விவாதம் நடத்தாமல் இப்படி பொதுவெளியில் ஊடகங்கள் வாயிலாக வெளியிடுவதே, அவர்கள் நடத்தும் நாடகமாகத்தான் தெரிகிறது' என பொருளாதார வல்லுநர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

தங்களை தேர்ந்தெடுத்தால் தமிழகத்தில் தேனாறும் பாலாறும் ஓடும் என மக்களை நம்பவைத்து ஆட்சிக்கு வந்த தி.மு.க, தான் அளித்த வாக்குறுதிகளை எப்படி நிறைவேற்றப்போகிறது, அதற்காக மக்களிடம் என்னென்ன வரிகளை உயர்த்தப்போகிறது, ஓட்டுப்போட்ட மக்கள் அதற்காக என்னென்ன தியாகங்களை செய்தாக வேண்டும் என்பதெல்லாம் விரைவில் தெரிந்துவிடும்.

# அடுத்த சாதனைக்கு பாரதம் தயார்



விஜயபாரதம்

டோக்கியோ ஒலிம்பிக் முடிவடைந்த நிலையில் மாற்றுத் திறனாளிகளுக்கான பாராலிம்பிக்ஸ் 2020 வரும் ஆகஸ்ட் 24 முதல் செப்டம்பர் 5, 2021வரை டோக்கியோவில் நடைபெற உள்ளது. இதில் 22 வெவ்வேறு பிரிவுகளில் 539 போட்டிகள் 21 இடங்களில் நடத்தப்படும். இதில், பாரத்த்தின் சார்பில், ஒன்பது விளையாட்டு பிரிவுகளில் போட்டியிட 54 பாரா விளையாட்டு வீரர்களுடன் பாரதம் மிகப்பெரிய அணியை அனுப்புகிறது. ஆண்கள் உயரம் தாண்டுதலில் 2016 ரியோ பாராலிம்பிக்கில் தங்கப் பதக்கம் வென்ற தமிழக வீரர் மாரியப்பன் தங்கவேலு இக்குழுவின் கேப்டனாக தேர்வு செய்யப்பட்டுள்ளார். ‘இதற்காக 'கர் தே து கமல்' என்ற அதிகாரப்பூர்வ தீம் பாடல் உருவாக்கப்பட்டுள்ளது. இம்முறை பாராலிம்பிக்கில் குறைந்தபட்சம் 4 பதக்கங்களை நாங்கள் வெல்வோம்’ என பாராலிம்பிக் கமிட்டி ஆப் இந்தியா (பி.சி.ஐ) தலைவர் தீபா மாலிக் தெரிவித்துள்ளார்.

# முஸ்லிம்கள் ஆக்கிரமித்த கோயில் நிலம்



விஜயபாரதம்

திருச்சி மாவட்டம் துவரங்குறிச்சியில் விநாயகர் கோயிலுக்கு சொந்தமான இடத்தை முறைகேடாக முஸ்லிம்கள் ஆக்கிரமித்து திருமண மண்டபம், வணிக வளாகம் கட்டி உள்ளனர். அவற்றை அப்புறப்படுத்தி கோயில் நிலத்தை உடனடியாக மீட்டு தர வேண்டும் என்று பா.ஜ.கட்சியின் முன்னாள் தேசிய பொதுச் செயலாளர் ஹெச். ராஜா, ஹிந்து அறநிலையத்துறை அமைச்சர் சேகர் பாபுவுக்கு கோரிக்கை விடுத்துள்ளார். அவரது டுவிட்டர் பதிவில், இக்கோயிலுக்கு சொந்தமான நிலம் குறித்த தகவல்கள் துவரங்குறிச்சி 1864ம் ஆண்டு கிராம இனாம் பதிவேட்டில் வடகுறிச்சி விநாயகருக்கு என்றும், 1966ம் ஆண்டு பதிவேட்டில் வடக்குறிச்சி விநாயகர் கோவில் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்று இதற்கான ஆதாரத்தை ஹெச். ராஜா வெளியிட்டுள்ளார். மேலும், இதேபோல தமிழகத்தில் இருக்கும் அனைத்து கோயில்களுக்கும் சொந்தமான நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்பு தொடர்பாக பொதுமக்கள் தானாக முன்வந்து புகார் அளிக்க வேண்டும் என்றும் கோரிக்கை வைத்துள்ளார்.

# காவலர்களுக்கு தியானப் பயிற்சி



விஜயபாரதம்

தமிழ்நாடு சிறப்பு காவல் படையில் பணிபுரியும் 22 ஆயிரத்திற்கும் மேற்பட்ட காவலர்களுக்கு மன அழுத்தம் உள்ளிட்ட பிரச்னைகளில் இருந்து விடுபட 'ஜென்டென்' என்ற தியான பயிற்சி வகுப்புக்கு, கூடுதல் டி.ஜி.பி ஜெயந்த் முரளி ஏற்பாடு செய்துள்ளார். இதற்காக, ஒரே நேரத்தில் 15 காவலர்கள் அமர்ந்து தியானம் செய்ய, தனி அறைகள் அமைக்கப்பட்டு உள்ளன. பிரம்மாகுமாரிகள், ஈஷா யோகா மைய நிர்வாகிகள் பயிற்சி அளித்து வருகின்றனர்.

# மதுக்கடை திறப்பு கோயிலுக்கு பூட்டு



விஜயபாரதம்

பல்லடம், சித்தம்பலம் நவகிரக கோட்டையில், ஆடி அமாவாசையை முன்னிட்டு நடந்த மகா மிருத்யுஞ்ஜய ஹோமத்தில் காமாட்சிபுரம் ஆதீனம் சிவலிங்கேஸ்வர சுவாமி பங்கேற்றார். அப்போது பேசிய அவர், 'தவறுகளுக்கு நிச்சயம் தண்டனை கிடைத்தே தீரும். இந்தத் தலைமுறையில் செய்யும் தவறு, ஏழு ஜென்மங்களுக்கும் தொடரும். ஆண்கள் தர்மசீலர் என்றும், பெண்கள் தர்மபத்தினி என்றும் கூறப்படுவர். தர்மத்தின் வழியில் இருந்து தவறியதால், கொரோனாவால் அச்சப்பட்டு வருகிறோம். மதுக்கடைகள் திறக்கப்பட்டு, கோவில்கள் மூடப்படுகின்றன.நாகரிகம் எனும் பெயரில், நாட்டின் பாரம்பரியத்தை மறந்ததாலேயே இந்த அவல நிலை ஏற்பட்டுள்ளது. ஆடி அமாவாசை நாளில் முன்னோர் பூலோகத்துக்கு வந்து செல்வதாக ஐதீகம். அந்நாளில், கடவுளையும், முன்னோரையும் வழிபட்டு தர்மம் செய்வது அவசியம்' என்று கூறினார்.

---




விஜயபாரதம்

# உஜ்வாலா 2.0

உத்தரப் பிரதேசத்தின் மஹோபாவில் சமையல் எரிவாயு இணைப்புகளை வழங்கி, பிரதமரின் உஜ்வாலா 2 திட்டத்தை பாரதப் பிரதமர் நரேந்திர மோடி இன்று பிற்பகல் 12:30 மணிக்கு காணொலிக் காட்சி வாயிலாக துவக்கி வைக்கிறார். இதில், உஜ்வாலா திட்டத்தின் பயனாளிகளுடன் கலந்துரையாடும் மோடி, நாட்டு மக்களுக்கு உரையாற்றுவார்.

முன்னதாக, 202122க்கான நிதிநிலை அறிக்கையில், உஜ்வாலா திட்டத்தின் கீழ் கூடுதலாக ஒரு கோடி சமையல் எரிவாயு இணைப்புகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. தற்போது, பிரதமரின் இத்திட்டத்தின் முதற்கட்டத்தில் கொண்டுவரப்படாத குறைந்த வருமானம் உடைய குடும்பங்களுக்கு வைப்புத்தொகை இல்லாமல் கூடுதலாக ஒரு கோடி சமையல் எரிவாயு இணைப்புகளை வழங்க (உஜ்வாலா 2.0 கீழ்) திட்டமிடப்பட்டுள்ளது.

புலம்பெயர் தொழிலாளர்கள் இதில் சேர்வதற்கு ரேஷன் அட்டை, முகவரி ஆவணங்களை சமர்ப்பிக்கத் தேவையில்லை. ‘குடும்ப உறுதி ஆவணம்', ‘முகவரி ஆதாரத்திற்கு’ சுய வாக்குமூலமே போதுமானது. மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சர், உத்தரப் பிரதேச முதல்வர் உள்ளிட்டோர் இவ்விழாவில் கலந்து கொள்கின்றனர்.



விஜயபாரதம்

# மோடி தலைமையில் ஐ.நா விவாதம்

ஐநா பாதுகாப்பு கவுன்சிலில் நேற்று நடைபெற்ற ஒரு உயர்மட்ட திறந்த விவாதத்தில் பாரதப் பிரதமர் மோடி தலைமைத் தாங்கினார். ஐ.நாவில் இதுபோன்ற விவாதத்தில் தலைமை வகிக்கும் முதல் பாரதப் பிரதமர் மோடி'தான் என்பது குறிப்பிடத்தக்கது. வீடியோ கான்பரன்சிங் வழியாக நடைபெறும் இந்த விவாதம் 'கடல்சார் பாதுகாப்பை மேம்படுத்துதலில் சர்வதேச ஒத்துழைப்புக்கான ஒரு வழக்கு' என்ற தலைப்பில் நடைபெற்றது. இதில், ஐ.நா சபையின் முக்கிய உயர்மட்ட விரிவுரையாளர்கள், பல நாட்டுத் தலைவர்கள் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர். ஏற்கனவே சில வாரங்கள் முன்பு, ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் கடல் பாதுகாப்பு, கடல் குற்றங்கள் குறித்த பல்வேறு அம்சங்கள் விவாதிக்கப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. எனினும், கடல் பாதுகாப்பு குறித்த ஒரு உயர்நிலை திறந்த விவாதம் என்பதை மட்டுமே பிரத்யேக நிகழ்ச்சி நிரலாகக் கொண்டு முழுமையான விவாதம் நடைபெறுவது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆப்கன் செல்லும் பாரத வீரர்கள்



விஜயபாரதம்

ஆப்கானிஸ்தானில் உள்ள பாரத அரசின் தூதரகங்களின் பாதுகாப்பை மேம்படுத்த பாரத அரசு முடிவு செய்துள்ளது, அதற்காக 35 இந்தோ திபெத் எல்லைப் பாதுகாப்புப் படையினரை அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே ஆப்கனில் 300 கமாண்டோக்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். இதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 35 கமாண்டோக்களும் தானாக முன்வந்து இந்த பொறுப்பை ஏற்றுக்கொண்டனர். அவர்கள் விரைவில் அங்கு பணிக்கு செல்வர் என இந்தோ திபெத் எல்லை காவல்படைத் தலைவர் கிருஷ்ணா சௌத்ரி கூறினார். முன்னதாக, இந்த படைப்பிரிவில் இரண்டு பெண் அதிகாரிகள் பணியில் இணைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



விஜயபாரதம்

# பசுஞ்சாணப் பொருட்கள் விற்பனை

சத்தீஸ்கர் அரசு, அம்மாநில விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் கிடைக்கும் வகையில் ஒரு கிலோ பசுஞ் சாணத்தை 2 ரூபாய்க்கு வாங்குகிறது. அதனை 354 சுயஉதவிக் குழுவைச் சேர்ந்த 4,000 பெண்களைக் கொண்டு அந்த பசுஞ்சாணத்தில் இருந்து உரம், வரட்டி, விளக்கு, பூந்தொட்டி போன்றவை தயாரித்து விற்பனை செய்கிறது. ரூ. 5 கோடி மதிப்பிலான இந்த பொருட்கள் இதுவரை விற்பனை செய்யப்பட்டுள்ளன. மக்களிடம் நல்ல வரவேற்பை இது பெற்றதையடுத்து அவற்றை ஆன்லைன் விற்பனை நிறுவனங்கள் வாயிலாக விற்பதற்கு, நடவடிக்கை எடுத்துள்ளது. அதிலும்கூட, விற்பனை துவங்கிய சில நாட்களில் ரூ. 1 லட்சத்திற்கும் அதிகமாக பொருட்கள் விற்கப்பட்டுள்ளன. இதனால், பெண்களுக்கு வேலைவாய்ப்பு, விசாயிகளுக்கும் அதிக வருவாய், சுற்றுசூழல் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு நன்மைகள் ஏற்படுகிறது.

# பக்ரீத்துக்கு தளர்வு ஓணத்துக்கு கெடுபிடி



விஜயபாரதம்

கம்யூனிஸ்ட் தலைமையிலான கேரள அரசு, முஸ்லிம்களின் பண்டிகையான பக்ரீத்துக்கு 3 நாட்கள் தளர்வுகள் அறிவித்தது. அதன் விளைவாக அங்கு பக்ரீத் ஒரு கொரோனா சூப்பர் ஸ்பிரெட்டராக மாறியது. பாரதத்திலேயே அதிக கொரோனா பாதிப்பு எண்ணிக்கை கொண்ட மாநிலமாக அந்த சிறிய மாநிலம் மாறியது. முஸ்லிம்களுக்கு சலுகை வழங்கிய அதே கம்யூனிச அரசு, ஹிந்துக்களின் விழாவான ஓணத்திற்கு எந்த சலுகையும் அளிக்காமல் அதிக கெடுபிடி செய்துவருகிறது. அதனை மறைக்க, 'இந்த ஆண்டு டிஜிட்டல் முறையில் ஓணம் பண்டிகை கொண்டாட திட்டமிடப்பட்டுள்ளது. கேரளாவின் பாரம்பரிய கலை, கலாசாரம், உணவு, சுற்றுலா தலங்கள் காணொலி காட்சியாக வெளியிடப்படும். டிஜிட்டல் ஓணம் நிகழ்ச்சிகளை ஆகஸ்ட் 14ல் முதல்வர் பினராயி விஜயன் துவக்கி வைக்கிறார். அதில் உலக மலர் கோலம் போட்டி நடத்தப்படும். இதில் பங்கேற்க 10ம் தேதி முதல் பெயரை பதிவு செய்யலாம். இப்போட்டியில் பங்கேற்கும் மலையாளிகள், தங்கள் ஓணம் பூக்கோலத்தை சுற்றுலா துறையின் இணையதளத்தில் பதிவேற்றலாம்' என்று மழுப்பி வருகிறார் கேரள சுற்றுலாத் துறை அமைச்சரும் பினராயி விஜயனின் மருமகனுமான முகமது ரியாஸ்.

# விவசாயிகள் உதவித் தொகை

பிரதமரின் விவசாயிகள் உதவித்தொகை திட்டத்தின் கீழ், நாடு முழுவதும் உள்ள தகுதியான விவசாயிகளுக்கு ஆண்டுக்கு 6 ஆயிரம் ரூபாய், 4 மாதங்களுக்கு ஒரு முறை 3 தவணைகளாகப் பிரித்து வழங்கப்படுகிறது. பிரதமர் அலுவலகம் இது குறித்து வெளியிட்ட அறிக்கையில், வீடியோ கான்ஃபரன்சிங் மூலம் நடைபெற்ற நிகழ்ச்சியில் 9 கோடியே 75 லட்சத்துக்கும் அதிகமான விவசாய குடும்பங்களுக்கு மொத்தம் சுமார் 19 ஆயிரத்து 500 கோடி, அவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாக பரிமாற்றம் செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் விவசாயிகளுடனும் நாட்டு மக்களுடனும் பிரதமர் கலந்துரையாடினார். முன்னதாக 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் பங்கேற்றவர்களுக்கு பிரதமர் தனது சுட்டுரை வாயிலாக புகழஞ்சலி செலுத்தினார். அதில் வெள்ளையனே வெளியேறு இயக்கம் மகாத்மா காந்தியால் உத்வேகமடைந்தது, இளைஞர்களை எழுச்சி பெறச்செய்தது" என்று கூறியுள்ளார்.

விஜயபாரதம்



# ஹிந்தி நீக்கம் உருது திணிப்பு



விஜயபாரதம்

ஹேமந்த் சோரன் தலைமையிலான ஜார்கண்ட் அரசு, அம்மாநிலத்தில் வேலைக்கான தேர்வுகளுக்கான மொழிகளில் ஒன்றாக உருது மொழியை திணித்துள்ளது. அது அங்கு 5 % மட்டுமே பேசப்படுகிறது. அது அங்குள்ளவர்களுக்கான பழங்குடி மொழியும் அல்ல. ஆனால் அதே சமயம் 62 % மக்கள் பேசும் மொழியாகவும் தேசிய மொழியாகவும் உள்ள ஹிந்தியையும் சமஸ்கிருதத்தையும் நீக்கியுள்ளது. மேலும் அப்பகுதி மக்கள் பயன்படுத்திவரும் பழங்குடியினர் மொழியாக மாகஹி, போஜ்புரி, மைதிலி, அங்கிகா உள்ளிட்ட மொழிகளும் நீக்கப்பட்டுள்ளன. இதில் போஜ்புரி மொழியை மட்டும் சுமார் 20 லட்சம் பேர் பயன்படுத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. சிறுபான்மையினரை திருப்திப்படுத்த காங்கிரஸ் ஆதரவில் ஆட்சி செய்துவரும் ஹேமந்த் சோரன் இது போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவது அம்மாநில மக்களை அதிருப்தியில் ஆழ்த்தியுள்ளது. ஜார்க்கண்ட் அரசின் இந்த முடிவு, அம்மாநிலத்தின் 30 லட்சத்துக்கும் அதிகமான மக்களை பாதிக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு அம்மாநில பா.ஜ.க கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.



விஜயபாரதம்

# பிளாஸ்டிக் கொடியை தவிர்ப்போம்

ஆகஸ்ட் 15ம் தேதி பாரதத்தின் 74வது சுதந்திர தினம் கொண்டாடப்படுகிறது. இதை மத்திய அரசு கொரோனா கட்டுப்பாடுகளுடன் கொண்டாட திட்டமிட்டுள்ளது. இந்நிலையில் மத்திய உள்துறை அமைச்சகம் மாநில அரசுகளுக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளது. அதில், 'பிளாஸ்டிக்கால் தயாரிக்கப்பட்ட தேசியக் கொடிகளுக்கு காகிதம் போல மக்கும் தன்மையில்லை என்பதோடு, பயன்பாட்டுக்கு பிறகு உரிய மரியாதையுடன் பிளாஸ்டிக் கொடிகள் அப்புறப்படுத்துவதை உறுதி செய்வதிலும் நடைமுறை சிக்கல் உள்ளது' என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதைத்தவிர, தேசியக் கொடி அச்சிடப்பட்ட மாஸ்க் உள்ளிட்டவற்றையும் தவிர்த்து தேசியக் கொடிக்கு உரிய மரியாதையை நாம் செலுத்துவோம்.

# வாட்ஸ்அப்பில் சான்றிதழ்




விஜயபாரதம்

கொரோனா தடுப்பூசி செலுத்தும் ஒவ்வொருவருக்கும் மத்திய அரசு சார்பில் தடுப்பூசி செலுத்திக்கொண்டதற்கான சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது. கோவின், உமங், டிஜி லாக்கர், ஆரோக்கிய சேது ஆகிய செயலிகளில் தடுப்பூசி சான்றிதழ் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்ற நடைமுறை இருந்தது. இந்நிலையில் இனி, வாட்ஸ் ஆப்பில் கொரோனா சான்றிதழ் பெற்றுக் கொள்ளலாம் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. அதன்படி, தடுப்பூசி செலுத்திக்கொண்டவர்கள் 'கோவிட் சர்டிபிகேட்' (covid certificate) என டைப் செய்து +91 9013151515 என்ற எண்ணுக்கு அனுப்ப வேண்டும். உடனடியாக உங்களுக்கு OTP எனப்படும் கடவுச்சொல் எண் வரும். அந்த OTP எண்ணை பயன்படுத்தி ஒரு சில நொடிகளில் கொரோனா தடுப்பூசி சான்றிதழை பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம்.




# ஹிந்து கோயில்கள் வீடுகள் தாக்கப்பட்டன

நமது அண்டை நாடான வங்க தேசத்தில், கடந்த சனிக்கிழமை அன்று, குல்னா மாவட்டத்தின் ஷியாலி, கோவரா கிராமங்களில் உள்ள ஹிந்துக்கள் ஒரு சாமி ஊர்வலத்தை நடத்தினர். அதனை தடுத்து நிறுத்துமாறு உள்ளூர் முஸ்லிம் மதகுரு முஸ்லிம்களுக்கு கட்டளையிட்டார். அதனைத் தொடர்ந்து, நூற்றுக் கணக்கான முஸ்லிம்கள் கைகளில் பயங்கர ஆயுதங்களுடன் அப்பகுதியில் உள்ள நான்கு கோவில்களை அடித்து நொறுக்கினர். 58 ஹிந்து வீடுகளைத் தாக்கி கொள்ளையடித்தனர். இது குறித்து புகார் அளித்தும் காவல்துறை இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை, வங்கதேசத்தின் எந்த ஊடகமும் இந்த செய்தியை வெளியிடவில்லை என பங்களாதேஷ் ஹிந்து ஒற்றுமை கவுன்சில் அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது. இது துரதிருஷ்டவசமானது, கண்டிக்கத்தக்கது. வங்கதேச அரசு குற்றவாளிகளை கைது செய்ய வேண்டும், கோயிலை மறு சீரமைப்பு செய்ய வேண்டும், மக்களின் சொத்துக்கள் சேதத்திற்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என்று வி.ஹெச்.பி தேசிய செய்தித் தொடர்பாளர் வினோத் பன்சால் அறிக்கை வெளியிட்டுள்ளார்.




விஜயபாரதம்

# பாகிஸ்தானுக்கு மூக்குடைப்பு

ஆப்கானிஸ்தான் நிலைமை குறித்து விவாதிக்க சக்தி வாய்ந்த 15 நாடுகளின் பாதுகாப்பு கவுன்சிலின் (யு.என்.எஸ்.சி) அமர்வு, ஐ.நா சபைக்கு தற்போது தலைமை வகிக்கும் பாரதத்தின் தலைமையில் ஐ.நா சபையில் நடைபெற்றது. அதில் கலந்துகொள்ள பாகிஸ்தான் விடுத்த அழைப்பை பாரதம் நிராகரித்தது. இந்த கூட்டத்தில் உரையாற்றிய ஆப்கன் தூதர் குலாம் இசச்சாய், பாகிஸ்தான் தலிபான் பயங்கரவாதிகளுக்கு ஆயுதங்கள், போர் தளவாடங்கள், போக்குவரத்து உள்ளிட்ட உதவிகளை வழங்குவதாக பகிரங்கமாக குற்றம் சாட்டினார். ‘பயங்கரவாதத்தை எவ்வகையிலும் உலக நாடுகள் அனுமதிக்கக்கூடாது. ஆப்கன் பயங்கரவாதிகள் வேறு எந்த நாட்டையும் அச்சுறுத்துவதற்கோ தாக்குவதற்கோ அந்த நாட்டை பயன்படுத்தவில்லை என்பதையும் உறுதிப்படுத்துவதும் அவசியம்’ என்று ஐ.நாவிற்கான பாரதத்தூதர் டி எஸ் திருமூர்த்தி கூறினார்.

# வி.வி.கிரி



விஜயபாரதம்

பாரதத்தின் நான்காவது குடியரசுத் தலைவர், ஆளுநர், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் என்று பல்வேறு முக்கியப் பொறுப்புகளை வகித்தவர் வி.வி.கிரி என்று அழைக்கப்படும் வரககிரி வேங்கட கிரி. பாரதத்தின் முதல் மக்களவைத் தேர்தலில் அன்றைய சென்னை மாகாணத்தில் இருந்த இன்றைய ஆந்திரத்தின் பாதபட்டினம் தொகுதியிலிருந்து வெற்றி பெற்றார்.

நேருவின் அமைச்சரவையில் தொழிலாளர் நலத்துறைக்குப் பொறுப்பு வகித்தார். ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் சென்னை மாகாணத்தின் தொழிலாளர் நலத்துறை அமைச்சராக ராஜாஜி, டி.பிரகாசம் ஆகியோரின் அமைச்சரவையில் பதவி வகித்தவர் வி.வி.கிரி. 1942ல் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தை காந்தி தொடங்கியபோது, அமைச்சர் பதவியை உதறிவிட்டு, போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்றார். 1957ல் இருந்து 1967வரை, உத்தரப் பிரதேசம், கேரளா, மைசூரு மாநிலங்களின் ஆளுநராகவும் பொறுப்பு வகித்தார்.

1967ல் குடியரசுத் துணைத் தலைவரானார். 1969ல் காங்கிரஸ் கட்சியை எதிர்த்து சுயேச்சையாகப் போட்டியிட்டு குடியரசுத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். வி.வி. கிரியின் தந்தை ஜோகையா பண்டுலு சென்னை மாகாண சட்டக் கவுன்சில் உறுப்பினராக பதவி வகித்தார். வங்கத்தில் 'வட இந்திய ரயில்வே தொழிலாளர்கள் சங்கம்' அமைக்கப்பட்டத்தில் வி.வி. கிரியின் தந்தை ஜோகையாவுக்கு முக்கியப் பங்குண்டு.

தன் தந்தையின் வழியிலேயே அரசியலிலும் தொழிலாளர் சங்க நடவடிக்கையிலும் அடியெடுத்துவைத்தவர் வி.வி. கிரி. லண்டனுக்குச் சட்டம் படிக்கச் சென்ற கிரி, அப்போது தீவிரமடைந்திருந்த அயர்லாந்து தொழிலாளர்களின் போராட்டங்களால் ஈர்க்கப்பட்டார். அதே காலக்கட்டத்தில்தான் காந்தியை அவர் லண்டனில் சந்தித்தார். 1921ல் காந்தியின் அழைப்பை ஏற்று, வழக்கறிஞர் தொழிலை விட்டுவிட்டு முழுநேர அரசியலில் ஈடுபட்டார்.

1926, 1942 ஆண்டுகளில் ஏ.ஐ.டி.யு.சி தொழிற்சங்கத்தின் தலைவராக பதவி வகித்தார். பாரத சுதந்திரத்துக்கு பின்னர், அவர் இலங்கைக்கு உயர் ஆணையராக நியமிக்கப்பட்டார். குடியரசுத் தலைவரான பிறகும்கூட, சிறப்பு அழைப்பின் பேரில் ஜெனீவாவில் நடந்த சர்வதேசத் தொழிலாளர் அமைப்பின் மாநாட்டில் கலந்துகொண்டு பேசினார்.

ஏறக்குறைய 40 ஆண்டு காலம் சர்வதேசத் தொழிலாளர் அமைப்புடன் தொடர்பில் இருந்தவர் வி.வி.கிரி. கிரி ஒரு சிறந்த எழுத்தாளராகவும் சிறந்த பேச்சாளராகவும் இருந்தார். இவர் 'தொழில் நிறுவனங்களின் உறவுகள்' மற்றும் 'இந்திய தொழில் நிறுவனங்களில் உழைப்பாளர் பிரச்சனைகள்' போன்ற தலைப்புகளில் புத்தகங்கள் எழுதி உள்ளார்.

# வலையில் சிக்கிய மீம்கள்

இன்னைக்கு விழுந்து விழுந்து சமையல் நிகழ்ச்சிக்கு குரல் தருபவர் தான்...



மக்கள் பசிக்கு ஏதாவது ஊசி இருக்கான்னு எகத்தாலமா கேட்டாரு...

வாகன வரி, நில வரி உயர்தாமல் இருந்ததால் வருமானம் குறைந்துள்ளது - வெள்ளை அறிக்கை



வரியை உயர்த்த போகிறோம் என்பதை சுற்றி வளைத்து சொல்லத்தான் இந்த வெள்ளை அறிக்கையா கோபால். ஏற்கனவே கரண்ட் பில் கண்ணை கட்டுது கோபால், கண்ணை கட்டுது